திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தக் கொல்லிமலை 'லேம்ப் சொசைட்டி' சரியாக நடைபெறாததற்கு வன இலாகாவினர்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாக எந்த எந்த இடத்தில் முறைகேடுகள் இருக்கின்றன என்று தகவல் கொடுத்தால் உரிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, சித்தேரி லேம்ப் சொசைட்டியில் கான்டிராக்ட் விடாமல் தனியார்களுக்கு விடுவதாக அங்குள்ள மக்கள் சொல்வது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கொல்லிமலை பற்றிய கேள்வி.

கடலை எண்ணெய் தயாரிப்பு ஆலைகள்

*வினா எண். 22—திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் விளையும் கடலையை மூலப்பொருளாகக் கொண்டு தஞ்சை, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் எண்ணெய் ஆலைகளை உருவாக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலத்தில் உள்ள சூரியகாந்தி விதை எண்ணெய் பிழியும் ஆலையில் தற்போது கடலை எண்ணெயும் பிழியப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் ஒரு கடலை எண்ணெய் பிழியும் ஆலை அமைக்கும் வேலை நடந்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆலை அமைக்கும் செயற்குறிப்பேதும் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, திருவண்ணாமலையில் ஒரு கடலை எண்ணெய் பிழியும் ஆலை அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். எப்போது வேலை தொடங்கப்படும் ? துரிதமாக வேலை நடக்கவில்லை என்று தெரிகிறது. துரிதமாக வேலை நடைபெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

1980 பிப்ரவரி 4]

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, வேலை முடியும் தருவாயில் இருக்கிறது ; விரைவில் திறக்கப்பட்டு, வேலை நடைபெறும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி சூரியகாந்தி விதை எண்ணெய் பிழியும் ஆலை செயல்படாமல் இருக்கிறது. அதற்குப் போதுமான அளவு விதை வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த ஆலையைக் கடலை எண்ணெய் பிழியும் ஆலையாக மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவரவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, திருவண்ணாமலையில் அமைக்கப்படும் கடலை எண்ணெய் பிழியும் ஆலையின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ? அது எப்போது உற்பத்தியைத் தொடங்கும் ? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு இலட்சம் டன் எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் ?

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் கடலை எண்ணெய் பிழியும் ஆலை ஒன்றும், அத்தோடு ஒரு பிண்ணாக்கு ஆலை அமைக்கும் வேலையும் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். தேசிய கூட்டுறவு வளர்ச்சி இணைய நிதி உதவியுடன் 77.10 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆலைகளை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவி வருகிறது.

திரு. ரா.கு. பெருமாள் : தலைவரவர்களே, மூன்று மாவட்டங்களில் மட்டும் இந்த ஆலைளைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் கடலை எண்ணெய் பிழியும் ஆலை ஒன்று நிறுவும் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர் :) தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, அமைச்சரின் செயலர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் பிழியும் தொழிற்சாலை தொடங்கும் உத்தேசம் இல்லை என்று சொன்

னார்கள். மேலை தஞ்சை மாவட்டத்தில் கடலை அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதை கருத்திற்கொண்டு அங்கே கடலை எண்ணெய் பிழியும் ஆலை ஒன்றை நிறுவுவது பற்றி மறுபரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிற கடலை விந்துக்கள் அனைத்தையும் கொள் முதல் செய்து அருகிலே இருக்கிற விருத்தாசலம் ஆலையிலே பயன் படுத்தப்படுகின்ற காரணத்தாலே அந்த யோசனை தற்போது அரசினுடைய கவனத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச் சுச் செயலர் அவர்கள் பதில் சொல்லும் போது கடலை ஆலை என்றும், பிண்ணாக்கு ஆலை என்றும் தனித்தனியாகச் சொன்னார் கள். ஆனால் எண்ணெய் தயாரிக்கும் போது மீதி ஆவது தான் பிண்ணாக்கு, ஆகவே இந்த இரண்டுக்கும் தனித்தனியே ஆலை ஏதும் இருக்கிறதா? அப்படியானால் அதற்குரிய விளக்கத்தினை அவர்கள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பிண்ணாக்கு ஆலை என்பது தனி ஆலை அல்ல. எண்ணெ தயாரிக்கும் ஆலையின் ஒரு பகுதிதான் அது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கடலையிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலை நிறுவும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்ச ரவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கே கிடைக்கக்கூடிய கடலை வித்துக்களை விருத்தாசலத்திற்குக் கொண்டு சென்று எண்ணெ தயாரிப்பதாகச் சொல்கிறார்கள். அதற்குப் பதிலாக தஞ்சையி லேயே ஒரு தொழிற்சாலை அமைத்தால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், ஆகவே அதை அனுசரித்தாவது மாண்புமிகு அமைச்ச ரவர்கள் அந்த ஆலையை தஞ்சையிலே நிறுவ முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவரவர் களே, தஞ்சை மாவட்டத்திலே எண்ணெய் ஆலையை நிறுவ வேண்டுமென்றால் அதற்குரிய போதிய கடலை கிடைக்குமா என்ற பிரச்சினையை ஆராய்ந்து பார்த்தபின் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்களின் மேலான யோசனை களை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.